STC. 708/2016

P.W.1 சஞ்சீவ், த.பெ ஜெயராஜ் 21.03.2024.

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை :

எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். எனது மனைவி பெயர் கௌசல்யா. நான் பலவருடங்களாக கணவாய்பட்டியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது உடன்பிறந்த சகோதரி உமா ஆவார். அவரது கணவர் தவமணி குன்னூரில் இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று அங்கேயே குடியிருந்து வருகிறார். நான் தனிப்பட்ட முறையில் கொடுக்கல் வாங்கல் தொழில் எதுவும் செய்யவில்லை . நான் 15 வருடங்களாக ஆம்புலன்ஸ் டிரைவராக இருந்து வருகிறேன்.பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை ஏற்பட்ட சமயத்தில் நான் டிரைவராக இருந்தேன். எதிரி எங்கள் ஊருக்கு வந்து பழக்கம் கிடையாது நான் அவர் ஊருக்கு சென்றபோது எனக்கு பழக்கம். எனது மைத்துனர் தவமணியை வைத்து தான் எதிரி எனக்கு பழக்கம் என்றால் சரிதான். எதிரியானவர் குன்னூரில் விளையாட்டு பொருட்கள் சிறிய கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். எதிரியின் அம்மா அந்த பகுதியில் கவுன்சிலராக உள்ளார். எதிரியின் அம்மா அரசியல் தேவைக்காக எனது மைத்துனரிடம் கொடுக்கல் வாங்கல் இருந்து வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரியானவர் என்னிடம் முதலாவது குன்னூரில் வைத்து பணம் கேட்டார்.

2. எதிரி என்னிடம் பணம் கேட்ட தேதி என்ன என்றால் தேதி ஞாபகமில்லை ஒருவாரம் கழித்து வரசொல்லியிருந்தேன் . எதிரி பணம் கேட்ட தேதி நான் குன்னூரில் இருந்தேன். அந்த சமயத்தில் நான் மூன்று நாள் லீவில் (விடுமுறை) இருந்தேன். ஒருவாரத்திற்கு முன்பு எதிரி பணம் கேட்காவிட்டால் நான் பணம் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். பணம் கேட்ட அன்றே பணம் கொடுக்கும் சூழ்நிலை அன்றைய தினம் இல்லை என்றால் சரிதான். நான் பணிபுரிந்தஇடத்தில் வருகை பதிவேட்டை பார்த்தால் நான் எந்த காலத்தில் பணியில் இருந்தேன் என்று தெரியவரும் என்றால் சரிதான். நான் எதிரிக்குபணம் கொடுத்தாக சொல்லும் தேதியில் நான் அவருக்கு பணம் கொடுத்தற்காகவோ அதனை அவர் பெற்றுகொண்டதற்காகவோ ஆவணம் எதுவும் ஏற்படுத்தி கொள்ளவில்லை என்றால் சரிதான்., காசோலையை என்னிடம் கொடுத்தார். காசோலையில் நான் எதிரிக்கு பணம் கொடுத்த தேதி காசோலையில் வராது

என்றால் சரிதான். பணம் கொடுத்ததை நிரூபிப்பதற்காக வேறு ஆவணம் எதுவும் நீதிமன்றல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் காசோலை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி நிரப்பி காசோலை கொடுத்திருந்தால் அந்ததேதியை குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர்அறிவிப்பில் எதிரி 31.05.2016 ம் தேதியிட்டு காசோலை கொடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோலும் வழக்கில் சொல்லியுள்ளதுபோலும் எதிரி எனக்கு 31.05.2016 ம் தேதியிட்டு காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பணம் கொடுத்ததாக சொல்லும் தேதிக்கு பிறகு நான் எதிரியிடம் எப்போது பணத்தை திருப்பி கேட்டேன் என்றால் குன்னூரில் சென்று கேட்டேன்.

3. எனது வழக்குபடி பணம் பெற்றுக்கொண்ட நபர் 45 நாட்களில் திரும்ப தருவதாக சொல்லியிருந்தார் என்றால் சரிதான். அதன்காரணமாக தான் நான் 45 நாட்கள் கழித்து குன்னூருக்கு சென்று பணத்தை திருப்பி கேட்டேன் என்றால் சரிதான். எதிரி அப்போது பணம் எதுவும் கொடுக்கவில்லை. காசோலையை கொடுத்து வங்கியில் கொடுத்து மாற்றி கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் தாக்கல் செய்த காசோலை 01.06.2016 ம் தேதி வங்கியிலிருந்து திரும்பியது. எனது மனுவில் 08.06.2016 ம் தேதி காசோலை திருப்பியதாக குறிப்பிட்டுள்ளது தவறு என்று சொன்னால் சரிதான். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு எதிரி பதிலறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த பதிலறிவிப்பில் குன்னூரில் உள்ள எனது மைத்துனர் தவமணிக்கு கொடுத்த காசோலையை வைத்து நான் தவறாக வழக்கு போட முயற்சிப்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த பதிலறிவிப்பை மறுத்து நான் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. பதிலறிவிப்பில் சொன்ன விஷயங்களை மறுத்து எனது மனுவிலோ அல்லது முதல் விசாரணையிலோ எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி பதிலறிவிப்பில் சொன்ன சங்கதிகள் உண்மை என்பதால் தான் நான் மறுத்து எதுவும் சொல்லவில்லை என்றால்ச ரியல்ல. எனது மைத்துனர் தவமணி எதிரியின் தாயார் மீது குன்னூர் நீதிமன்றத்தில் 20 லட்ச ரூபாய் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு விசாரணையில் இருக்கும் போது எதிரியின் தாயார் இறந்துவிட்டார் என்றால் எதிரி தாயார் இறந்தது தெரியும் வழக்கு

பற்றி தெரியாது. எதிரியின் தாயார் எனது மைத்துனர் தவமணியிடம் வாங்கிய கடனுக்கு எனது மைத்துனரிடம் ஜாமீனுக்காக கொடுக்கப்பட்ட எதிரியின் காசோலையை வைத்து நான் தவறுதலாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ரூபாய் 10 லட்சம் கேட்டவுடன் கொடுக்கும் அளவுக்கு எனக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல என்னிடம் இருந்தது. நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யவில்லை. நான் அவ்வாறு பணம் கொடுக்கும் அளவுக்கு என்னிடம் வசதியிருந்தால் நான் வருமான வரி செலுத்தியிருப்பேன் என்றால் நான் எனது சேமிப்பில் இருந்தும் எனது மனைவியின் நகைகளை வைத்தும் பணம் கொடுத்தேன். எனது மனைவியின் நகையை அடகு வைத்து கொடுத்தேன். நகைகளை அடகு வைத்தால் குறைந்தபட்சம் வட்டி போடுவார்கள் என்றால் சரிதான். அந்த வட்டி எதிரிக்கு பணம் கொடுத்தால் எனக்கு இழப்புதான் என்றால் சரிதான். நான் எதிரியிடம் வட்டி எதுவும் வாங்கினேனா என்றால் இல்லை. எனது மனைவியின் நகையை பின்னிட்டு திருப்பினேனா என்றால் திருப்பிவிட்டேன்.எனது மனைவியின் நகைகளை அடகு வைத்து திருப்பியதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக இருக்கிறேன். நான் வழக்கில் சொல்லியுள்ளது போல் எதிரிக்கும் எனக்கும் சட்டப்படி தீர்க்கப்படவேண்டிய கடன் எதுவும் நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு சட்டப்படியான கடனுக்காக இந்த வழக்கு காசோலை வழங்கப்பட்டவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் பணம் வாங்க அவர் மட்டும் தான் வந்தார். எனது மைத்துனர் தவமணி குன்னூரில் கந்துவட்டி தொழில் செய்வதால் அதன் காரணமாக சிலர் தற்கொலை செய்து கொண்டதாக நாளிதழில் செய்தி வந்தது என்றால் அது பொய்யான தகவல். எனது மைத்துனருக்கு எதிராக குன்னூரில் பிரச்சனை அதிகமாக இருந்தால் வழக்கு காசோலையை வைத்து எனது பெயரில் வழக்கு போட்டுள்ளது என்றால்ச ரியல்ல. எனக்கு 10 லட்சம் கொடுக்கும் அளவுக்கு வசதி இல்லை என்றும் எனக்கும் எதிரிக்கு அறிமுகம் இல்லை என்றும் எங்கள் இருவருக்கும் இடையே பணபரிவர்த்தனை எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. கையொப்பம் மட்டும் செய்து மற்ற விபரங்கள் நிரப்பப்படாமல் எனது மைத்துனர் தவமணியிடம் கொடுக்கப்பட்ட காசோலையை வைத்து நான் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் சம்பந்தமுமில்லை என்று சொன்னால் சரியல்ல

S.d./Sanjeev

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.